மாலை முரசு

பக்கங்கள் 14

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 13 புதன்கிழமை 30.08.2023 அதிர்வு 30

## 2 பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து!

**ஒருவர் மரணம்; 9 பேர் பேர் காயம்**

இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் சாவடைந்துள்ளார். அத்துடன் 9 பேர் காயமடைந்துள்ளனர்.

03 ▶



**சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில்**

# அலையெனத் திரண்ட உறவுகள் நீதி கோரி விண்ணதிரக் கோஷம்





(எஸ்.ஆர்.லெம்பேட், விஜயரத்தினம் சரவணன், எஸ்.நிதர்ஷன், பழுவூரான்)

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான இன்று நீதி கோரி வடக்கு, கிழக்கின் பல்வேறு இடங்களில் மாபெரும் கவனவீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

வடக்கு மாகாணத்துக்கான பிரதான போராட்டம் இம்முறை மன்னாரில் முன்னெடுக்கப்பட்டது. கிழக்கு மாகாணத்துக்கான பிரதான போராட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்றது.


03 ▶

## புதிய ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி சம்பந்தன் - சுமந்திரனுடன் பேச்சு

இலங்கைக்கான ஐ.நாவின் புதிய வதிவிடப் பிரதிநிதி மார்க் என்ட்ரோ பிரெஞ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை இன்று நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

03 ▶





## வெளிநாடுகளிடம் இலங்கை இனிமேல் கையேந்தக்கூடாது

**'நிலையான அபிவிருத்தி நோக்கு நிலை' நிபுணர் மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு**

"இலங்கையின் பொருளாதாரத்தை முழுமையாக மறுசீரமைக்க எதிர்பார்த்துள்ளோம். அதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தாய்லாந்து, இந்தோனேசியா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகளின் பாதையைப் பின்பற்றி, போட்டித்தன்மைமிக்க, புதிய சந்தை வாய்ப்புகளையும், வெளிநாட்டு முதலீடுகளையும் ஈர்க்கத் திட்டமிட்டுள்ளோம்."

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

"இலங்கையின் நிலையான அபிவிருத்தி நோக்குநிலை" என்ற தலைப்பில் அலரி மாளிகையில் நேற்று (29) நடைபெற்ற நிபுணர் மாநாட்டில் உரையாற்றும்போதே ஜனாதிபதி

04 ▶

# சர்வதேசமே எமக்கு நீதியை வழங்கு!

## - யாழ். போராட்டத்தில் உறவுகள் வலியுறுத்து



**(எஸ்.நிதர்ஷன்)**

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான இன்று போராட்டப் பேரணியொன்றை யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்தனர்.

வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இன்று காலை 10:30 மணியளவில் பஸ் நிலையத்தில் ஆரம்பமாகிய போராட்டம் 11 மணியளவில் பேரணியாக யாழ். நகரைச் சுற்றி யாழ். முனியப்பர் கோயிலடி வரை சென்று நண்பகல் 12 மணியளவில் நிறைவு பெற்றது.

இதன்போது இராணுவத்தினராலும் துணை இராணுவக் குழுவினராலும் கடத்தப்பட்டும் கைது செய்யப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது? என்று போராட்டக்காரர்கள் கேள்வி எழுப்பினர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணை வேண்டும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் உள்ளக விசாரணையில் நம்பிக்கையில்லை சர்வதேச குற்றவியல் நீதிமன்றினூடாக விசாரிக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

மேலும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே, சர்வதேசமே எமக்கு நீதியை வழங்கு, தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி வேண்டும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு, ஸ்ரீலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்து, அரசியல் கைதிகளை விடுதலை செய், தமிழர் தேசத்தில் சட்டவிரோத ஆக்கிரமிப்பை நிறுத்து உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு அவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

தமது உறவுகளைத் தேடி அலைந்து பலரும் உயிரிழந்து வருகின்ற நிலையில் தாமும் இறப்பதற்கு முன்னதாக தங்கள் உறவுகளைத் தங்களிடமே மீட்டுத் தர வேண்டும் எனப் போராட்டத்தில் பங்கேற்ற சொந்தங்கள் கண்ணீர் மல்கக் கோரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் போராட்டப் பேரணியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் அரசியல்வாதிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.








# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## அலையெனத் திரண்ட...

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் ஏற்பாடு செய்த மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் இன்று காலை 10.30 மணியளவில் மன்னார் நகரில் உள்ள சதொச மனிதப் புதைகுழிக்கு அருகாமையில் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தில் வடக்கு மாகாணத்தில் உள்ள மன்னார், வவுனியா, கிளிநொச்சி , முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங்களையும் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கலந்துகொண்டனர்.

இலங்கை அரசின் முப்படைகளாலும், துணை ஆயுதக்குழுக்களாலும் போருக்கு முன்பும் போருக்குப் பின்பும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கோரி மன்னார் சதொச மனிதப் புதைகுழிக்கு அருகாமையில் இருந்து மாபெரும் கவனயீர்ப்பு போராட்டப் பேரணி ஆரம்பமாகியது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், பொது அமைப்பினர், சிவில் அமைப்பினர், சட்டத்தரணிகள், அருட்தந்தையர்கள், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் இந்தப் பேரணியில் பங்கேற்றனர்.

மன்னார் சதொச மனிதப் புதைகுழிக்கு அருகாமையில் இருந்து ஆரம்பமான பேரணி மன்னார் சுற்று வட்ட பாதை ஊடாக ஓ.எம்.பி. அலுவலக வீதியைச் சென்றடைந்தது.

பின்னர் அங்கிருந்து வைத்தியசாலை வீதி ஊடாக மன்னார் பொது விளையாட்டு மைதானத்தைச் சென்றடைந்தது.

இதில் கலந்துகொண்டவர்கள் கறுப்புக் கொடிகளை ஏந்தி காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் புகைப்படங்களைச் சுமந்து பல்வேறு கோஷங்களை விண்ணதிர எழுப்பினர்.

பின்னர் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கருத்துக்கள் வெளியிடப்பட்டதோடு, மகஜர் பொது வெளியில் வாசிக்கப்பட்டது.

அந்த மகஜரை மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார் தலைமையிலான அருட்தந்தையர்களிடம் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கையளித்தனர்.

இந்தப் போராட்டப் பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோநோகராதலிங்கம், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் திருச்செல்வம் பரஞ்சோதி, முன்னாள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராசா நிரோஷ், முன்னாள் மன்னார் நகர பிதா ஞானப்பிரகாசம் ஜெராட், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் இரத்தினம் ஜெகதீசன், தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் அன்ரனி ஜெகநாதன் பீற்றர் இளஞ்செழியன் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்துக்கான பிரதான போராட்டம் இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்றது.

இன்று காலை 10 மணியளவில் மட்டக்களப்பு, கல்லடிப் பாலத்தில் இருந்து ஆரம்பமான இந்த மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டப் பேரணி நகரின் பிரதான வீதிகள் ஊடாக சென்று காந்தி பூங்காவை அடைந்தது.

இந்தப் பேரணியில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இருந்து பெருந்தொகையான காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் காணாமல்போனவர்களின் புகைப்படங்கள் மற்றும் பதாகைகளை ஏந்தியவாறு கலந்துகொண்டனர்.

“காலம் கடந்தும் எமக்குரிய தீர்வுகள் கிடைக்கவில்லை” எனத் தெரிவித்தும், “எங்கே எங்கே காணாமல்போன எமது உறவுகள் எங்கே” எனக் கோஷங்களை எழுப்பியவாறும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

“சர்வதேச விசாரணை வேண்டும்”, “எமது உறவுகள் எமக்கு வேண்டும்”, “இனவாதம் - மதவாதம் வேண்டாம்” எனக் கோஷங்களை எழுப்பியும் இந்தப் பேரணியில் பெருந்தொகையான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் போராட்டப் பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், இலங்கை ஆசிரியர் சங்க உறுப்பினர்கள், மட்டக்களப்பு மாவட்ட கமக்கார அமைப்புக்களின் உறுப்பினர்கள், சமூகமட்ட அமைப்பினர், அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## 2 பஸ்கள்...

இந்தச் சம்பவம் கொழும்பு - கண்டி பிரதான வீதியின் கஜுகம பகுதியில் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனியார் பஸ்ஸொன்றும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸொன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் தனியார் பஸ்ஸின் சாரதியான 44 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார். அதேவேளை, இரு பஸ்களில் பயணித்த 9 பேர் காயமடைந்து வத்துபிட்டிவல மற்றும் வரக்காபொல வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிட்டம்புவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## புதிய ஐ.நா.

சம்பந்தன் எம்.பியின் கொழும்பு இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும் கலந்துகொண்டார்.

இந்தக் கலந்துரையாடலின்போது இலங்கையின் சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

அதேவேளை, வடக்கு - கிழக்கில் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியிடம் சம்பந்தனும், சுமந்திரனும் எடுத்துரைத்தனர்.






# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**வெளிநாடுகளிடம்...**

இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கை இனிமேலும் ஏனைய நாடுகளுக்குச் சுமையாக இருக்கக் கூடாது என்றும், பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகள் செயற்பட்டமை போன்று, உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்தி ஒரு நாடாக நாமும் தனித்து முன்னேற முயற்சிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

“நிலையானஅபிவிருத்திஇலக்குகளை அடைவதில் நாம் இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து இங்கு குறிப்பிடப்பட்டது. நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அழைப்பு விடுத்துள்ள கலந்துரையாடலில் நானும் பங்கேற்கின்றேன். நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை நாம் இப்போது அடைந்து வருவதோடு, அதன் பிரதிபலன்களும் பாராட்டுக்குரியவை.

ஆனால் இன்று உலகம் பல மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கு கூடுதலாக, காலநிலை மாற்றத்தின் பொதுவான பிரச்சினைகளை கலந்துரையாட பரிஸ் காலநிலை மாநாடு மற்றும் கிளாஸ்கோ மாநாடு ஆகியவை நடத்தப்படுகின்றன.

இது தவிர, உலகம் முழுவதும் பரவிய கொவிட் தொற்றின் பாதிப்பையும் நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. கொவிட் 19 தொற்றினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட நாடாக இலங்கை உள்ளதுடன், எமது நாட்டின் பொருளாதாரமும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. மேலும், அனைத்து நாடுகளும் இதனால் பாதிக்கப்பட்டதோடு, இதன் மூலம் உலகப் பொருளாதாரத்தில் பெரும் பின்னடைவு ஏற்பட்டதையும் நாம் அறிவோம்.

ஐரோப்பாவின் பொருளாதாரம் இன்றளவிலும் சரிவை எதிர்கொள்கிறது. மறுமுனையில் பொருளாதாரத்தில் சரிவு ஏற்பட்டிருந்தாலும், அதிர்ஷ்டவசமாக அமெரிக்கா இருந்த நிலையை விடவும் தற்போது ஓரளவு முன்னேற்றம் கண்டுவருகிறது. சீனா இன்னும் மீண்டு வரவில்லை. எனவே, உலகப் பொருளாதார முன்னேற்றம் தடைப்பட்டுள்ளதுடன், அதனால் பெரும் பாதிப்புக்களையும் எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

அவ்வாறென்றால், நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு நாம் எவ்வாறு நிதியைப் பெற்றுக்கொள்வது? மற்றும் காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளைத் தணிக்கவும் உலகளாவிய நிதிக் கடன் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு நிதி நிவாரணங்களை பெற்றுக்கொள்ளும் முறைமைகளை எவ்வாறு கண்டுபிடிப்பது என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். அந்த இலக்குகளை அடைவதற்கு நாம் கடுமையாக உழைக்க வேண்டும்.

2030ஆம் ஆண்டுக்குள் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும், 2050ஆம் ஆண்டாகும் போது காலநிலை மாற்றம் தொடர்பான இலக்குகளை அடைவதற்குத் தேவையான நிகழ்ச்சி நிரலை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கும் அனைத்து நாடுகளின் ஆதரவையும் ஐநா பொதுச்செயலாளர் அண்மையில் கோரியிருந்தார்.

இவை அனைத்திற்கும் தேவையான வளங்களைக் கண்டறியும் திறன் நமக்கு இருக்க வேண்டும். இதற்கு அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இருக்கும் நிதி போதுமானதாக இருக்கும் என்று சிலர் நினைத்தனர். ஆனால் அந்த நாடுகள் அதற்கு முன்வரவில்லை. மேலும், தற்போது அவர்களிடம் அதற்கான வளங்கள் போதுமானதாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. அது தொடர்பாகவும் கவனம் செலுத்தி, இந்த நிதி மூலங்களைக் கண்டறிவது குறித்தும் சிந்திக்க வேண்டும்.

மேலும், இதற்காக, பலதரப்பு அபிவிருத்தி வங்கிகளிடமிருந்து மட்டுமன்றி, தனியார் துறையிலிருந்தும் நிதி நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என நம்பிக்கை கொண்டுள்ளோம். அந்த வகையில் முதலீடுகளுக்கும் பிணைமுறிகளை வெளியிடுவதற்குமான வாய்ப்புக்களை தனியார் துறைக்கு வழங்க வேண்டியது அவசியமாகும்.

ஆனால், தற்போதைய நிலவரப்படி பல நாடுகள் தொடர்பில் இது வெற்றி பெறுமா என்ற கேள்வி எழுந்துள்ளதுடன், தற்போதுள்ள திறன்கள் முதலீட்டுக்கு ஏற்றதாக இல்லை என தனியார் துறையினர் நினைக்க வாய்ப்புள்ளது. இந்த வாய்ப்பிற்காக நாம் மூன்றில் ஒரு பங்கை ஒதுக்கினால், மீதமுள்ள தொகையை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

2019 இல் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைய, மொத்தத் தேசிய உற்பத்தியில் 9 சதவீதத்தை மாத்திரம் வைத்திருப்பதே எமது தேவையாக இருந்தது. ஆனால் தற்போது, இந்தப் பின்னணியிலும், காலநிலை மாற்ற இலக்குகளுக்காக நாம் நிதியை ஒதுக்க வேண்டியுள்ளது.

இலங்கை எதிர்கொண்ட கடன் நெருக்கடியின் விளைவாக, இந்நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக மறுசீரமைக்க நாங்கள் எதிர்பார்ப்பதோடு, அதற்கான நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்து வருகின்றோம். அதற்காக தாய்லாந்து, இந்தோனேசியா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகள் பின்பற்றிய பாதை குறித்து நாம் கவனம் செலுத்தியுள்ளதோடு, இதன்போது உயர் போட்டித் தன்மையுடைய பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக எம்மால் மாற முடியும்.

நாம் தொடர்ந்தும் முன்பு இருந்தது போன்று சிறிய பொருளாதாரமாக செயல்பட முடியாது. நாம் நமது பொருளாதாரத்தை விஸ்தரிக்க வேண்டும். இதற்காக புதிய தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்த வேண்டும். மேலும், இதற்குத் தேவையான வெளிநாட்டு முதலீடு மற்றும் மூலதனத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும், மற்ற நாடுகளுக்கு நாம் சுமையாக இருக்கக்கூடாது. ஒரு நாடாக, பிற நாடுகளின் உதவியைப் பெற நாம் இனிமேலும் நினைக்கக் கூடாது. நம் நாட்டின் முன்னேற்றத்தை நாமே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். உலகின் பல நாடுகள் அதைச் செய்துள்ளதோடு, இவ்விடயத்தில், போரினால் முற்றாக அழிந்த வியட்நாமை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நமது நாடு இந்து மற்றும் பசுபிக் சமுத்திரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது. எனவே, எமக்கு பொருளாதார வளர்ச்சியை உருவாக்க பல வாய்ப்புகள் உள்ளன. நாம் இருக்கும் கிழக்கு ஆசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவில், இன்று பரவலான வளர்ச்சி ஏற்பட்டு வருவதை உங்களால் பார்க்க முடியும். இந்தியா இன்று பொருளாதார ரீதியில் வலுவடைந்து வருவதோடு, இந்து சமுத்திரப் பிராந்தியம், எதிர்காலத்தில் உயர் பொருளாதார வளர்ச்சிப் பிராந்தியமாக உருவெடுக்கும். தற்போது நாம் அனைவரும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவது, காலநிலை மாற்ற பாதிப்பைத் தணிப்பது மற்றும் உலகளாவிய கடன் நெருக்கடி ஆகியவை தொடர்பாக மதிப்பாய்வு செய்ய வேண்டிய நேரம் இது என்று கூற வேண்டும்.

நாம்அதிலிருந்துவிலகாமல்,இதற்காக கூட்டாகவும் குழுவாகவும் செயல்பட வேண்டும். அதற்காக நாம் ஒரு அணியாக புதிய மூலோபாயங்கள் ஊடாக முன்னோக்கிச் செல்வோம் என்று நான் அனைவரையும் அழைக்கின்றேன்.”

– என்றார்.

நிலையான அபிவிருத்தி சபை இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, நிலையான அபிவிருத்திக்கான சபையின் பணிப்பாளர் நாயகம் சமீந்திர சபரமாது, ஆசிய மற்றும் பசுபிக் வலய சமூக பொருளாதார ஆணைக்குழுவின் தகவல் பிரதானி ஆர்மன் பிடக்பேர்க்நியா, ஐ.நா. சபை அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் வதிவிட பிரதிநிதி அசூஸா குபோடா,ஐ.நா.சபைஅபிவிருத்திவேலைத் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே ஃப்ரேச் உள்ளிட்டோரும் இம்மாநாட்டில் உரையாற்றினர்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன, அமைச்சர்களான அலி சப்ரி, பவித்ரா வன்னியராச்சி, மஹிந்த அமரவீர, கெஹலிய ரம்புக்வெல, இராஜாங்க அமைச்சர்களான செஹான் சேமசிங்க, சீதா குமாரசிங்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க,சுற்றாடல்அமைச்சின்செயலாளர் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க, வலுசக்தி அமைச்சின் செயலாளர் யூ.கே. மாபா பத்திரன உள்ளிட்டவர்களோடு உயர்ஸ்தானிகள், தூதுவர்கள், பல்கலைக் கழக வேந்தர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி இன்று தேர்

















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## நீதித்துறையின் சீத்துவம்

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பிலான சர்வதேச தினம் இன்று. வடக்கு - கிழக்குத் தமிழர்தாயகத்தில்இப்படித்தமதுஇரத்தஉறவுகளைவலிந்து காணாமலாக்கப்பட்ட கொடூரத்தில் தொலைத்த பல்லாயிரம் தமிழர்கள் மீண்டும் ஒரு சர்வதேச தினத்தில் தமது ஆதங்கத்தை - விசனத்தை - வெப்பியாரத்தை - கொட்டித் தீர்க்கும் வகையில் இன்றும் வீதிகளில் நின்று போராடத் தவறவில்லை. நீதி கேட்டு - நியாயம் கோரி - உண்மைகளைப் பகிரங்கப்படுத்த வேண்டி - சட்டபூர்வ விசாரணக்கு வலியுறுத்தி - அவர்கள் நடத்தும் போராட்டத்தின் குரல் யாரின் காதுகளிலும் விழுவதாக இல்லை. இது தொடர்பில் நீதி, நேர்மையான முறையில் - சர்வதேச நியமங்களுக்கு அமைவாக - விசாரணை ஒன்று நடைபெறுவதற்கான சாத்தியமே தென்படவில்லை.

ஆனால், தெற்கில் ஆளும்தரப்பு அரசியல்வாதிகளின் கோரிக்கைகளை ஒட்டி அவர்கள் விடயத்தில் மீள்விசாரணைக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு கொழும்பில் ஆட்சியாளர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட 'அறகலய' போராட்டக்காரர்கள் மீது மே ஒன்பதாம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து கட்டவிழ்ந்த சம்பவங்களே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பதவியை துறந்து நாட்டை விட்டு , நாடு நாடாக ஓட வைத்தன என்பது வெளிப்படையானது.

அந்த மே9 தாக்குதலை அடுத்து இடம்பெற்ற சம்பவங்களின் போது ஆளும் தரப்பு எம்.பிக்களின் வீடு வாசல்கள், சொத்துக்கள், வாகனங்கள் கிளர்ச்சியில் ஈடுபட்ட தரப்பினரால் எரிக்கப்பட்டன.

அப்போது இராணுவத் தளபதியாக இருந்த ஜெனரல் சவேந்திர சில்வா, பொலிஸ்மா அதிபராக இருந்த சி.டி.விக்கிரமரட்ன மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் உரிய, போதிய நடவடிக்கைகளை உரிய சமயத்தில் எடுக்காதமையே வன்முறைகள் கட்டுப்படுத்த முடியாத நிலைக்குச் சென்றமைக்குக் காரணம் எனக் குற்றம் சுமத்தப்பட்டது.

அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இது தொடர்பில் விசாரணை செய்வதற்கு முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் ஒவ் பிளீட் வசந்த கரன்கொட, விமானப்படைத் தளபதி விமானப்படை மார்ஷல் ரொஷான் குணத்திலக, முன்னைய இராணுவத் தளபதி தயா ரட்னாயக்கா ஆகியோரைக் கொண்ட ஆணைக்குழு ஒன்றை நியமித்தார். அந்த ஆணைக்குழு அப்போதைய இராணுவ தளபதி சவேந்திர சில்வாவும், பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரட்னவும் மற்றும் அதிகாரிகளும் சரிவரச் செயற்படாமையே வன்முறையைக் கட்டுப்படுத்த முடியாமைக்குக் காரணம் என்ற கருத்தில் பரிந்துரை செய்திருந்தது.

இந்தப் பரிந்துரையின் அடிப்படையில் இந்த இரு அதிகாரிகளுக்கும், ஏனையோருக்கும் எதிராக புலன்விசாரணை முன்னெடுக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டு, அதற்கு ஆட்சேபம் தெரிவித்து, மேற்படி வன்முறைகளில் பாதிக்கப்பட்ட 22 எம்.பிக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முறையீடு செய்திருந்தனர்.

அந்த முறையீட்டின் மீதான நீதிமன்ற விசாரணையின் போது மேற்படி ஆணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் புதிய விசாரணைகளை மீள ஆரம்பித்து முன்னெடுப்பர் என்று நீதிமன்றத்திற்கு உறுதி வழங்கப்பட்டிருக்கின்றது.

பல்லாயிரம் தமிழர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்ட கொடூரம் - குரூரம் - குறித்து சர்வதேச நியமங்களுக்கு அமைவான விசாரணை ஏதும் இங்கு இல்லை. ஆனால் தெற்கில் பாதிக்கப்பட்ட எம்.பிக்கள் விடயத்தில் புதிதாக மேல்விசாரணை. இதுதான் சிங்களத்தின் நீதி துறையின் சீத்துவம்.

# இரண்டு பொலிஸார் மீது கத்திக் குத்தித் தாக்குதல்

எல்ல, கொடுவெல பிரதேசத்தில் சுற்றிவளைப்புக்கு சென்ற இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இன்று அதிகாலை 01.30 மணியளவில் எல்ல பொலிஸ் நிலையத்தின் ஐந்து உத்தியோகத்தர்கள் சுற்றிவளைப்புக்காகச் சென்ற போது அவர்களில் இருவர் இவ்வாறு தாக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்தவர்கள் 38 மற்றும் 29 வயதுடைய இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் எனவும், அவர்கள் தற்போது பதுளை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் எல்ல பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், எல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சந்தேகநபர் கடற்படையில் இருந்து தப்பிச் சென்றவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும், கைது செய்யப்படும் போது, சந்தேக நபரிடம் கூரிய கத்தி, கைக்குண்டு உள்ளிட்ட ஆயுதங்கள் இருந்தன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ரயிலுடன் மோதிய வான்



வாதுவ, தல்பிட்டிய பகுதியில் பாதுகாப்பற்ற ரயில் கடவையில் இன்று காலை 11 மணியளவில் வான் ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது வானில் இருவர் பயணித்துள்ளனர். விபத்தின் பின்னர், வானில் இருந்த ஒருவர் பாதுகாப்பாக வெளியே வந்துள்ளார். எனினும் வானில் சிக்கிய பெண்ணொருவர் பின்னர் காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காலியில் இருந்து மருதானை நோக்கிப் பயணித்த ரயிலுடன் வான் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன் காரணமாக கரையோர ரயில் சேவையும் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நோயாளர்களுக்கு வழங்க 1000 நீரிழிவுக் கைநூல்!



யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்றுவரும் நீரிழிவு நோயாளர்களுக்கு வழங்குவதற்கென நீரிழிவுக் கைநூலின் 1000 பிரதிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். நீரிழிவுக் கழகத் தலைவர் தி. மைக்கல் இவற்றை வழங்கி வைத்தார்.

கடந்த 24 ஆம் திகதி வைத்தியர் ம. அரவிந்தனிடம் இவை கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வைத்தியர் பரமேஸ்வரன், நீரிழிவுக் கழகச் செயலாளர் க. கணபதி, உபதலைவர் சொலைமன் சிறில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நண்பர்கள் நலன்புரி அமைப்பால் வறிய குடும்பத்துக்கு வீடு





(பௌசுல் றிபாஸ்)

பொத்துவில் செங்காமத்து பிரதேசத்தில் நண்பர்கள் நலன்புரி அமைப்பால் வீடு ஒன்று அமைத்து வழங்கப்பட்டது.

பொத்துவில் பிரதேசத்தில் இயங்கி வரும் நண்பர்கள் நலன் புரி அமைப்பின் முயற்சியால் அதன் அங்கத்தவர்கள், தனவந்தர்கள், சமூக ஆர்வளர்கள், ஆகியோரின் நிதியுதவி மூலம் செங்காமத்து கிராமத்தில் மிகவும் வறிய நிலையில் காணப்பட்ட குடும்பமொன்றுக்கு இந்த வீடு அமைத்து வழங்கப்பட்டது. சனிக்கிழமை (26) வீடு வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

# பேராசிரியர்களாகப் பதவி உயர்வு





(அ.அஸ்வர், நூருல் ஹுதா உமர் )

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தவிசுப் பேராசிரியராக கடமையாற்றும் றமீஸ் அப்துல்லா அவர்கள் சிரேஷ்ட பேராசிரியராக பதவியுயர்வு பெற்றுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சம்மாந்துறையில் பிறந்த இவர், 1995 இல் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக கடமையேற்றார். தனது முதுதத்துவமாணிப் பட்டத்தை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்களான சி. தில்லைநாதன், எம்.ஏ. நுஃமான் ஆகியோரின் வழிகாட்டலில் 2003 இல் பெற்றுக்கொண்டார்.

பேராசிரியர் திஸ்ஸ காரியவசம், பேராசிரியர் சி. தில்லைநாதன் ஆகியோரின் கீழ் பொதுசனத் தொடர்பாடல் துறையில் கலாநிதிப் பட்டத்தை சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் 2010 இல் பெற்றதோடு, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மொழித்துறை தலைவர், இணைப்பாளர் போன்ற உயர் பதவிகளை வகித்து, பின் 2014 இல் பேராசிரியராகவும் பதவி வகித்தார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊடகவியல்துறை டிப்ளோமா கற்கை நெறியின் வளவாளராகவும், இணைப்பாளராகவும் இவர் தொடர்ந்தும் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் கணக்கியல் பிரிவின் சிரேஷ்ட முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எம். சி. எம். நாசர் 2021 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் தொழிற்படும் வண்ணம் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் கணக்கியல் துறையின் கணக்கியல் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தனது விஷேட இளமாணி பட்டத்தை பூர்த்தி செய்த இவர் அங்கு உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்று சிறப்பாக சேவையாற்றினார்.

பின்னர் 2003 ஆண்டு தென்கிழக்குப் பல்கலைக்கழத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்தில் தகுதிகாண் விரிவுரையாளராக இணைந்து கொண்ட இவர் தனது முதுநிலை கற்கை நெறியான வியாபார நிர்வாகமாணியை இலங்கையின் வயம்ப பல்கலைக் கழகத்தில் பூர்த்தி செய்து முதுநிலை விரிவுரையாளர் தரம்-11 மற்றும் முதுநிலை விரிவுரையாளர் தரம் – 1 ஆகிய பதவிகளில் பதவி உயர்வுகள் பெற்றார்.




# யாழ். மாவட்ட பாடசாலைகளின் உதைபந்தாட்ட சம்பியனாக பற்றிக்ஸ

(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் லண்டன் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையில் வட மாகாண ரீதியில் நடத்திய 20 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். புனித பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனானது.

அரியாலை காற்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ். புனித பற்றிக்ஸ் கல்லூரி அணி இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை 2:1 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது.

இந்தப் போட்டித் தொடரின் காலிறுதிக்கு முந்திய போட்டியில் யாழ். புனித பற்றிக்ஸ் கல்லூரி அணி இலுப்பக்கடவை மகா வித்தியாலயத்தை 5 : 1 என்ற கோல் அடிப்படையிலும், காலிறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை 7 : 0 என்ற கோல் அடிப்படையிலும் , அரையிறுதி ஆட்டத்தில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை 3 :0 என்ற கோல் அடிப்படையிலும் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது .

இந்த உதைபந்தாட்டத் தொடரின் சிறந்த உதைபந்தாட்ட ஆட்ட வீராக யாழ. புனித பற்றிக்ஸ் கல்லூரி அணியின் இணைத் தலைவரான ஏ.ஜே. ஜெறோம் தெரிவு செய்யப்பட்டார்.

உதைபந்தாட்ட போட்டிகளுக்கு பிரதம அதிதியாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கு பதக்கங்ளையும் வெற்றிக் கிண்ணத்தையும் வழங்கினார்.

# மலையக மக்களின் வாழ்விட உரிமை பேசுபொருளாகியது கவலையளிக்கிறது

## மனித அபிவிருத்தி தாபன பணிப்பாளர் சிவப்பிரகாசம் கவலை

( வி.ரி. சகாதேவராஜா)

இரண்டு நூற்றாண்டு காலமாக மலையக மக்கள் பல துன்பங்களையும் துயரங்களையும் சவால்களையும் சந்தித்து வந்திருக்கின்றார்கள். இன்னும் அவர்களது வாழ்வியலுக்கான வாழ்விடத்துக்கான உரிமை என்பது பேசு பொருளாகவே இருக்கின்றது. இது கவலையளிக்கிறது.

இவ்வாறு மனித அபிவிருத்தி தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பி பி . சிவப்பிரகாசம் கவலை தெரிவித்தார்.

அண்மையில் மாத்தளை ரத்வத்தை தோட்டத்தில் இடம்பெற்ற வாழிடத்துக்கான உரிமை மீறல் சம்பவம் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

இன்று மலையகம் 200 வருட கால வரலாறுபற்றிபேசுகின்றோம். கொண்டாடுகின்றோம். பெருமைப்படுகிறோம். ஆனால் இன்னும் அந்த மக்களுக்கான மனித உரிமைகள் வாழ்விட உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன.





ரத்வத்தை தோட்டத்தில் ஏழை குடிமகனின் குடிசை உதவி முகாமையாளரால் பேடித்தனமாக அடித்து நொறுக்கப்பட்டது.

அங்கு எமது பிரதிநிதி நடராஜா நேரடியாக சென்ற பொழுது அவர்கள் அழுதழுது சோக சம்பவத்தை கூறியுள்ளனர்.

யானை உடைத்தது போன்று மிலேச்சத்தனமாக மக்களது உடைமைகளை உடைத்து இருக்கின்றார்கள். இவர்களுக்கு அடித்து உடைக்க எந்த உரிமையும் இல்லை.

இந்த வரலாறு தொடரக் கூடாது. அவர்களது வீட்டில் ஒரு நீடிப்பு செய்தால் அதனை பொலிஸில் முறையிட்டுத் தீர்த்துக் கொள்ள வேண்டும். அதைவிடுத்து இப்படி அடித்து உடைப்பதற்கு அவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது.

எதிர்காலத்தில் சட்ட ரீதியாக இதனை அணுக வேண்டும். ஒன்று அரசியல் ரீதியாக. இரண்டு சட்டரீதியாக. இரண்டும் செய்தால் தான் மலையகம் 200 என்பது அர்த்தப்படும். இது அரசியல்வாதிகளுக்கும் சமூக ஆர்வலர்களுக்கும் சமர்ப்பணம் .– என்றார்.

# சௌமியமூர்த்தி தொண்டமானின் 110 ஆவது ஜனன தின நிகழ்வுகள்










"மலையகத்தின் தந்தை" எனப் போற்றப்படுகின்ற பெருந்தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 110 ஆவது ஜனன தினம் இன்று தலை நகர் கொழும்பிலும், மலையகப் பகுதிகளிலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

கொழும்பு பழைய நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள அவரது உருவச் சிலைக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதிகள் மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.காவின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இ.தொ.காவின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் உட்பட கட்சி பிரமுகர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவும் இதன்போது கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினார்.

இந்த நிகழ்வின் பின்னர் இ.தொ.காவின் தலைமையகமான சௌமிய பவனின் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

அத்துடன், நுவரெலியா – கொட்டகலையில் உள்ள சி.எல்.எப். வளாகம் உட்பட ஏனைய பகுதிகளிலும் ஜனன தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

சுதந்திர இலங்கையில் உருவான முதலாவது நாடாளுமன்றத்தில் உறுப்பினராக அங்கம் வகித்தவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான். இலங்கை – இந்திய காங்கிரஸ் உருவாக்கத்துக்கு முக்கிய பங்களிப்பு வழங்கிய அவர் அதன் தலைவராகவும் செயற்பட்டார். இலங்கை – இந்திய காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸாக பெயர் மாற்றம் பெற்றது முதல் அதன் தலைவராக அவர் செயற்பட்டார். முக்கிய பல அமைச்சுக்களை அவர் வகித்தார்.

# இந்தியப் பகுதிக்கு உரிமை கோரி சீனா வெளியிட்ட புதிய வரைபடம்

## மோடியை வாய் திறக்க கோருகிறார் ராகுல்



புதுடெல்லி,ஓக.30

லடாக்கில் ஓர் அங்குலம் நிலம் கூட இழக்கப்படவில்லை என்று பிரதமர் மோடி கூறியமை வடிகட்டின பொய் என ராகுல்காந்தி கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.

சீனா தனது எல்லையையொட்டிய இந்தியாவின் பல பகுதிகளை தனக்குச் சொந்தமானதாக உரிமை கொண்டாடிவருகிறது. குறிப்பாக, இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களுள் ஒன்றான அருணாசலபிரதேசத்தை தங்கள் நாட்டின் தெற்கு திபெத் என்று சீனா கூறுகிறது. அதுதொடர்பான அத்துமீறல் செயல்களிலும் அவ்வப்போது ஈடுபட்டுவருகிறது. கடந்த ஏப்ரல் மாதம், அருணாசலபிரதேசத்தின் 11 இடங்களுக்கு புதிய பெயர்களை சீனா சூட்டியது. அதை இந்தியா முற்றிலுமாக நிராகரித்துவிட்டது.

இந்த நிலையில், அருணாசல பிரதேச மாநிலம், சர்ச்சைக்குரிய அக்சாய் சின் பகுதிகளை இணைத்து சீனாவின் புதிய வரைபடத்தை அந்த நாடு நேற்று முன்தினம் வெளியிட்டது. தனிநாடான தைவான் மற்றும் பிரச்சினைக்குரிய தென்சீனக் கடல் பகுதி தீவுகளும் புதிய வரைபடத்தில் சீனாவுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

சீனாவின் நில அளவை மற்றும் வரைபடத் தயாரிப்பு விளம்பர தின கொண்டாட்டத்தையொட்டி இந்த வரை படத்தை அந்நாட்டு இயற்கை வள அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் அரிந்தம் பாக்சி கூறுகையில் – “அருணாசலபிரதேசத்தை இணைத்து சீனா புதிய வரைபடத்தை வெளியிட்டிருப்பது, எல்லை விவகாரத்தை மேலும் சிக்கலாக்கவே செய்யும். இதுதொடர்பாக, சீனாவுக்கு ராஜதந்திர வழிகளில் நாம் நமது கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளோம்“ என்றார்.

அருணாச்சல பிரதேசம் மற்றும் ஆக்கிரமித்துள்ள அகாஷி சின் பகுதிகளை தன் நாட்டின் ஒரு பகுதியாக காட்டும் புதிய வரைபடத்தை சீனா வெளியிட்டுள்ளது. இது குறித்து டெல்லி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் ராகுல்காந்தி கூறியதாவது:

லடாக்கில் ஓர் அங்குல நிலம் கூட இழக்கப்படவில்லை என்று பிரதமர் கூறியமை முற்றிலும் வடிகட்டின பொய். பல ஆண்டுகளாக நான் கூறி வருகிறேன். லடாக்கில் சீனா எல்லை மீறுகிறது என்பது அனைவருக்கும் தெரியும். இது ஒரு முக்கிய பிரச்சினை. பிரதமர் இது குறித்து வாய் திறக்க வேண்டும். இந்த வரைபடப் பிரச்சினை மிகவும் தீவிரமானது. – இவ்வாறு அவர் கூறினார்.

# இந்தியப் பொதுத் தேர்தல் முற்கூட்டியே நடக்கலாமாம்

## பீகார் முதல்வர் நிதிஷ் குமார் தெரிவிப்பு

நாலந்தா,ஓக.30

மக்களவை தேர்தலை முன்கூட்டியே நடத்த வாய்ப்புள்ளதாக பீகார் முதல்வர் நிதிஷ் குமார் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற பொதுத்தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. ஆனால் இத்தேர்தலை முன்கூட்டியே அதாவது, இந்த ஆண்டு இறுதியிலேயே நடத்த மத்தியில் ஆளும் பாரதீய ஜனதா திட்டமிட்டிருப்பதாக மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜி நேற்று முன் தினம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் பீகார் மாநிலத்தில் நாலந்தா திறந்தநிலை பல்கலைக் கழகத்தின் புதிய வளாகத்தை முதல்வர் நிதிஷ்குமார் நேற்றுத் திறந்துவைத்தார். அப்போது அவரிடம், மம்தா பானர்ஜியின் கருத்து குறித்து நிருபர்கள் கேட்டனர்.

அதற்கு நிதிஷ்குமார், “நாடாளுமன்ற தேர்தல் முன்கூட்டியே நடக்கலாம் என்று நான் கடந்த ஏழு, எட்டு மாதங்களாகவே கூறிவருகிறேன். எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை காரணமாக, அதிக தொகுதிகளில் தோல்வி ஏற்படக்கூடும் என்ற அச்சத்தால் மத்திய பாரதீய ஜனதா அரசு அவ்வாறு நடத்தக்கூடும். எனவே, மக்களவை தேர்தலில் பாரதீய ஜனதாவைத் தோற்கடிக்க அனைத்து எதிர்க்கட்சிகளும் அணிதிரள வேண்டும். எனக்கு என்று தனிப்பட்ட லட்சியமோ, ஆசையோ இல்லை. தேர்தலுக்கு முன்பாக, பாரதீய ஜனதாவுக்கு எதிராக அதிகமான கட்சிகளை ஒன்று திரட்ட வேண்டும் என்பது தான் எனது ஒரே எண்ணம். எதிர்க்கட்சிகள் இடையே ஒற்றுமையை ஏற்படுத்த நாங்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். மும்பையில் நடைபெறும் 3-வது கூட்டத்துக்குப் பிறகு, “இந்தியா“ கூட்டணி மேலும் வலிமை அடையும். பீகார் மாநிலத்தில் சாதிவாரி கணக்கெடுப்புமுடிவடைந்துள்ளது.அதுதொகுக்கப்பட்டு, விரைவில் வெளியிடப்படும். சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதில் தாமதம் தொடர்பாக மத்திய அரசு மௌனம் காப்பது ஏன்? இதுகுறித்து பாரதீய ஜனதா தலைவர்கள் வாய் திறக்க வேண்டும்.“ – என்று அவர் கூறினார்.

# ஆறு முறை பாம்பு கடித்தும் உயிர் பிழைத்த மாணவன்!

கலபுரகி,ஓக.30

இரு மாதங்களில் 6 முறை பாம்பு கடித்தும் 9 ஆம் வகுப்பு மாணவன் உயிர் பிழைத்த அதிசய சம்பவம் நடந்துள்ளது. இதனால் நாகதேவதைக்கு கோவில் கட்ட பெற்றோர் முடிவு செய்துள்ளனர்.

கர்நாடக மாநிலம் கலபுரகி மாவட்டம் சித்தாப்பூர் தாலுகா ஹலகார்த்தி கிராமத்தை சேர்ந்தவர் விஜயகுமார். இவரது மனைவி உஷா. இந்த தம்பதிக்கு பிரஜ்வல் (வயது 14) என்ற மகன் இருக்கிறான். இவன் அப்பகுதியில் உள்ள பள்ளியில் 9 ஆம் வகுப்பு படித்து வருகிறான். இந்த நிலையில் கடந்த மாதம் (ஜூலை) 3 ஆம் திகதி வீட்டு பின்புறம் சிறுநீர் கழிக்க சென்ற போது ஒரு பாம்பு அவனைக் கடித்துள்ளது. இதையடுத்து அவனுக்கு ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சை பெற்று வீடு திரும்பிய நிலையில் 3 நாடள்களுக்குப் பிறகும் (அதாவது 6 ஆம் திகதி) அவனை பாம்பு கடித்தது. இவ்வாறு அவனை 6 முறை பாம்பு கடித்துள்ளது. இதற்காக அவர் 3 முறை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று குணமானான். மேலும் 3 முறை நாட்டு மருந்து சிகிச்சை எடுத்துள்ளான்.

# ரஷ்யாவின் மீது உக்ரைன் மிகப் பெரிய தாக்குதல்!

## டிரோன் மூலம் முக்கிய இடங்கள் குறிவைப்பு



உக்ரைன் மீது ரஷ்யா கடந்த 18 மாதங்களாகத் தாக்குதல் நடத்தி வருகிறது. முதலில் அடி வாங்கிக் கொண்டிருந்த உக்ரைன், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் ஆதரவால் தற்போது பதிலடி கொடுத்து வருகிறது. குறிப்பாக டிரோன் மூலம் முக்கியமான இடங்களை இலக்கு வைத்து வருகிறது.

இதனால்ரஷியாவில்பெரும்அளவில் உயிர்ச்சேதம் இல்லை என்றாலும், கட்டடங்கள் போன்றவை கட்டமைப்புகள் சேதம் அடைந்து வருகின்றன.

இந்த நிலையில், இன்று புதன்கிழமை அதிகாலை ஆறு பிராந்தியங்களை இலக்காக வைத்து உக்ரைன் டிரோன் தாக்குதல் நடத்தியதாக ரஷ்யா குற்றம்சாட்டியுள்ளது. கடந்த 18 மாதங்களில் ரஷியா மீதான மிகப்பெரிய தாக்குதல் இது எனக் கூறப்படுகிறது.

பிஸ்கோவ் விமான நிலையத்தில் நான்கு விமானங்கள் சேதம் அடைந்துள்ளன. ஏராளமான டிரோன்களை சுட்டு வீழ்த்தியதாக ரச்கய பாதுகாப்பு அமைச்சகம் தகவல் வெளியிட்டுள்ளது.

# உக்ரைனுக்கு மேலும் அமெ. இராணுவ உதவி

வொஷிங்டன்,ஓக.39

உக்ரைனுக்கு மேலும் 25 கோடி டொலர்கள் மதிப்பிலான இராணுவ உதவிகளை வழங்க உள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் தனது படைகளை அனுப்பித் தாக்குதல் நடத்தத் தொடங்கியது. இதற்கு உக்ரைன் இராணுவம் தொடர்ந்து பதிலடி கொடுத்து வருகிறது. இந்தப் போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். மேலும் லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதற்கிடையில், இந்த போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஆதரவு தெரிவித்து வருகின்றன. மேலும் உக்ரைனுக்கு பொருளாதார உதவிகள் மற்றும் ஆயுத உதவிகளையும் வழங்கி வருகின்றன. மேற்கத்திய நாடுகளின் உதவியோடு உக்ரைன் தொடர்ந்து ரஷ்யாவிற்கு எதிராக போரிட்டு வருகிறது.

இந்நிலையில், உக்ரைனுக்கு மேலும் 25 கோடி டொலர்கள் மதிப்பிலான இராணுவ உதவிகளை வழங்க உள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. ரஷ்யா போர் தொடுத்தது முதல் உக்ரைனுக்கு இதுவரை அமெரிக்கா ஆயிரம் கோடி டொலருக்கும் அதிகமான பொருளாதார மற்றும் இராணுவ உதவிகளை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# பிரேஸிலில் 9 பேர் எரித்துப் படுகொலை

## போதைப்பொருள் கடத்தல் கும்பல்களின் கைவரிசை




சால்வடார், ஓக. 30

பிரேசிஸில் போதைப் பொருள் கடத்தல் கும்பல்களுக்கு இடையேயான மோதலில் 3 குழந்தைகள் உள்பட 9 பேர் தீ வைத்து, எரித்துப் படுகொலை செய்யப்பட்டனர்.

பிரேஸிலின் வடகிழக்கில் பாகியா மாகாணத்தில் சால்வடார் நகரில் போதைப் பொருள் கடத்தல் கும்பல்களுக்கு இடையே திடீரென மோதல் ஏற்பட்டது. இதில் அந்த கும்பலை சேர்ந்த மர்மநபர்கள் அருகருகே அமைந்துள்ள 2 வீடுகளுக்கு உள்ளே புகுந்து அவற்றை சூறையாடினர். இதில், 9 பேர் தீ வைத்து, எரித்து படுகொலை செய்யப்பட்டனர். அவர்களில் 3 பேர் குழந்தைகள். 2 பேரின் உடல்கள் பகுதியளவும், 5 பேரின் உடல்கள் முற்றிலும் எரிந்து விட்டன. 2 பேருக்கு தீயால் காயம் எதுவும் ஏற்படவில்லை. படுகாயம் அடைந்த ஒரு சிறுமிக்கு ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் பாகியா மாகாணத்தில் 6,600 பேர் கொல்லப்பட்டு உள்ளனர்.

# தொழில்நுட்பக் கோளாறால் 200 விமான சேவைகள் ரத்து

## இங்கிலாந்தில் பயணிகள் அவதி



லண்டன், ஓக.30

இங்கிலாந்தில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக 200 விமான சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன. இங்கிலாந்து நாட்டின் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அமைப்பில் திடீரென தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டது. இதனையடுத்து சரியாக சிக்னல் கிடைக்காததால் பல விமானங்கள் மற்ற ஐரோப்பிய நாடுகளின் விமான நிலையங்களில் தரையிறக்கப்பட்டன. இதன் காரணமாக இங்கிலாந்தில் 200-க்கும் மேற்பட்ட விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன.

பின்னர் தொழில்நுட்ப குழுவினர் பல மணி நேரம் போராடி இதனைச் சரிசெய்தனர். எனினும் இந்த தொழில்நுட்ப கோளாறால் பிரிட்டிஷ் ஏர்லைன்ஸ் நிறுவன விமானங்களின் கால அட்டவணை நாள் முழுவதும் மாற்றப்பட்டது. இதன் காரணமாக விமான நிலையத்துக்கு வந்திருந்த பயணிகள் பெரும் அவதியடைந்தனர்.

# நீதி கோரி மன்னாரில் திரண்ட உறவுகள்






















# மட்டக்களப்பில் உறவுகள் மாபெரும் போராட்டம்


















கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949